# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 19 | March மார்ச் | 2019

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# ...கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்

நீதி. 31:30


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| சகோதரிகளே! வாழ்வின் சவாலை... | 3 |
| மனந்திரும்புவதிலிருந்து பெருமை... | 9 |
| சோதோமும் கொமோராவும் | 11 |
| வாலிபர் பகுதி | 13 |
| சிறுவர் பகுதி | 16 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,
**R. ஆன்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. சியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**
**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 6:45 மணி**

செய்தியாளர்
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.


## வேத ஆராய்ச்சிக்கான புதுமையான அணுகுமுறைகள்




- தனிப்பட்ட வேத ஆராய்ச்சி செய்பவர்களுக்கான ஒரு அருமையான புத்தகம் !
- பாடங்களுடன், பயிற்சி திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது

விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

**கிருபையுள்ள வார்த்தை**
**பெண்களை பெருமைப்படுத்தும்**
**பரிசுத்த வார்த்தை**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 99**

ஆசிரியர் உரை

# சகோதரிகளே! வாழ்வின் சவாலை சந்திக்க கற்றுக்கொள்ளுங்கள்

P.C. பிலேமோன் ராஜா



அன்பார்ந்த வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

சகோதரிகள் அனைவருக்கும் சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக்கள்!இந்த மாதம், சகோதரிகளே, பெண்களாகிய நீங்கள் உங்களது வாழ்வின் சவால்களை சந்திப்பதைப் பற்றி வேதவசனத்தின் துணையோடு கற்றுக்கொள்வோம்.

ஒவ்வொரு கிறித்தவ பெண்ணையும் உலகமே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றதை, ஒவ்வொரு கிறித்தவ பெண்களும் கவனத்தில் கொள்ளவேண்டும். நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய கிறிஸ்துவுக்காகவும், நமது பரலோக தகப்பனாகிய தேவனுக்காகவும் கிறித்தவ பெண்கள் சவால்களை சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

ஒழுக்கநெறி மற்றும் ஆன்மீக காரியங்கள் நீங்கள் சார்ந்து, சந்திக்கும் எதிர்ப்பு அல்லது மோதல்களை, சத்தியத்தை கொண்டு (பைபிள் வசனங்களை) சந்தித்து, சத்தியத்தின் பக்கம் நிற்கிறீர்களா?

சவால்கள் வரும்போது, அவைகளை சந்திக்கையில் எப்படி கையாளுகிறோம்? இதில் பலவீனமாக உள்ளோமா? 'எல்லோரும் இப்படி செய்கையில் நான் மட்டும் பைபிள் சொல்லும்படி செய்ய வேண்டுமா?' என்று நினைக்கும் அளவு பலவீனமாக உள்ளோமா? பரலோக கடவுளை நம்பாதவரைப் போல செயல்படுகிறோமா?

வாழ்வின் சவால்களை சந்திக்க, கற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு கிறித்தவ பெண்ணுக்கும், தேவையான சில குறிப்புகளை அறிந்துக்கொள்வோம்.

**இச்செய்தியில், கிறிஸ்தவ பெண்கள் சந்திக்கும் 3 வகை சவால்களை குறிப்பாக படிப்போம்...**

1.கிறித்தவ பெண்ணாக சந்திக்கும் சவால்கள்

2.கிறித்தவ மனைவியாக சந்திக்கும் சவால்கள்

3.கிறித்தவ தாயாக சந்திக்கும் சவால்கள்

## 1. கிறித்தவ பெண்ணாக சந்திக்கும் சவால்கள் - Meeting the Challenges as a Christian Women.

**சங் 23:1 "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்"**

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; எனக்கு குறையில்லையே! அதாவது, தேவையானது எப்போதுமிருக்கிறதினால் நான் தாழ்ச்சியடையேன் என்கிறார். கிறித்தவத்தில் சமாதானமும் பாதுகாப்பும் உள்ளடங்கியுள்ளது. ஏனென்றால் ஒரு கிறித்தவ பெண்மணியின் அரசர் (அபிஷேகிக்கப்பட்டவர்), மற்றும் மீட்பர் என்பவர் விடுதலைசெய்யும் வல்லமைபெற்ற அரசர்; எனவே முழுமையான பாதுகாப்பு உண்டு.

அவரை மட்டும் பின்தொடர, அவரின் பாத தடத்தில் அடிமேல் அடிவைத்து செல்கையில், அவர் (அவரே) மட்டும் நடத்துகிறார் என்று உறுதி தேவை. சிறிது கவனம் தப்பினாலும் வழி விலகல் ஏற்படும்.

எந்த ஒரு பெண்ணுமே கிறித்தவராக மாறியபோதே, கிறித்துவிலும், கிறித்தவத்திலும் ஆழமான ஆவிக்குரிய முதிர்ச்சியாய் இருக்க வாய்ப்பில்லை. அதனால் கிறித்தவ வாழ்க்கையுடன் இணைந்துள்ள கடமைகள், திட்டங்களை அதிகம் அறிந்திருக்கவும் வாய்ப்பில்லை. உதாரணமாக, திருமணத்திற்கு முன்பு ஒரு பெண் வாழ்க்கையை பற்றி அறிந்திருப்பதும், திருமணத்திற்கு பிறகு அறிந்துக்கொள்வதினும் வித்தியாசம் உண்டு. உடை உடுத்துதல், உணவு செய்தல், குடும்ப உறவு, பிள்ளையைப் பெறுதல், பிள்ளைகளை அவர்களின் எதிர்காலத்திற்காய் பயன்பெறும்படி வளர்த்தல் போன்றவற்றை கற்றுக்கொள்வதைப் போலவே, ஆன்மீக குடும்பமாகிய சபையின் ஐக்கியத்தின் மூலமும், தனிப்பட்ட வேத ஆராய்ச்சி மூலமும் கற்றுக் கொள்ள முடியும்.

வாழ்வில் ஏற்கனவே செய்த சில தவறுகளை மாற்றவே முடியாது. ஆனாலும், நமக்கு நட்டம் ஏற்படாத வண்ணம் முன்மாதிரி காட்டியுள்ள திருமறையை, அதில் உள்ள பெண்களை முன்மாதிரியாக கொண்டு நமக்கு சட்டதிட்டங்களை உருவாக்கி, நமது வாழ்வின் சவால்களை சத்தியத்தின்படி (பைபிள்) சந்திக்கலாம்.

வேத ஞானம், திருமறையில் சொல்லப்பட்ட பெண்களின் அணுகுமுறை ஆகியவை, என் சவாலை நான் சந்திக்க எனக்கு உதவுமே என கற்றறிந்து, பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு சவால்களை சந்திக்கையில், அதினால் மிகவும் நல்ல தருணங்களையும், சமுதாயத்தில் நல்ல செல்வாக்குகளையும் பெறமுடியும். சவால்களை சந்திக்கையில் அதை அன்போடும், சேவை மனப்பான்மையோடும் செயல்முறைப்படுத்திக் காட்ட வேண்டும்.

1 பேதுரு 5:8 "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்."

உங்களை கட்டுப்படுத்திக்கொண்டு கவனமாக வாழுங்கள். ஏனெனில், பிசாசு உங்கள் பகைவன். அவன் உங்களை விழுங்கும் பொருட்டு, யாராவது அகப்படுவோமா என்று மிகவும் கவனத்துடனே, கர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல தேடிக்கொண்டு அலைகிறான். அவனைப் பின்பற்ற மறுத்து விடுங்கள். அதாவது, அவன் காண்பிக்கிற பாவத்தின் கவர்ச்சிக்கு மயங்கிவிடாதிருங்கள்.

1 யோவான் 5:19 "நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்."

இன்றைய உலகம் பல்வேறுபட்ட தீமைகளால் நிறைந்ததாக நாம் காண்கிறோம். போதைப் பொருளுக்கு அடிமைப்படுதல், தனிப்பட்ட சுதந்திரம் என்ற பெயரில் தனிமனித ஒழுக்கம் கெட்டு திருமணத்திற்கு முன்பு உடல் ரீதியான உறவுகள், குடிக்கு அடிமையாதல், மிகவும் அசிங்கமான ஆபாசமான உடை (அவற்றில் முக்கால் நிர்வாணம் கூட உண்டு), கருகலைப்பு - அதாவது குழந்தையை கருவிலே கொலை செய்தல், ஓரினச் சேர்க்கை இன்னும் பல தீமைகள் எல்லாம் இந்த சமுதாயத்தில் மெல்ல மெல்ல ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இதில் மிகப்பெரிய கொடுமை எது என்றால், இந்த உலகையும் நம்மையும் படைத்த கடவுள் இவைகளுக்கு என்ன பதில் சொல்கிறார் என்று முழுமையாக அறிவதும் இல்லை; மற்றும், அதை அறிந்தாலும் பிறருக்கு சொல்வதும் இல்லை.

இஸ்ரவேல் மக்களைப்போல நாமும் உலக கவலை அல்லது உலக விருத்தியில் மயங்கி, ஆவிக்குரிய நிலையில் பாபிலோனுக்கும் எகிப்திற்கும் அடிமையாகிவிட்டவர்களாக இருக்கிறோமா? 'என் மக்கள் வேத அறிவு இல்லாமையால் அழிகிறார்கள்' என தேவன் சொல்வது நம் காதுகளில் விழுகிறதா? ஓசியா 4:6 "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய்; ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்."

நினைவிருக்கட்டும், தேவனே எகிப்தியரை 10 வாதைகளினால் தண்டித்து, எபிரெயர்களை அற்புதமாக விடுவித்து அழைத்து வந்தார். ஆகிலும் தேவதிட்டத்தையும், தேவசித்தத்தையும் இஸ்ரவேலர் தொடராததால், 6 இலட்சத்துக்கு அதிகமானோர் அழிந்தபோது தேவன் அமைதிகாத்தார். நாமும், உலகைவிட சபை காரியங்களில் ஈடுபாடு காட்டவில்லையானால் அழிவோம்.

கிறிஸ்தவ பெண்ணே! உன் குடும்பம் காப்பாற்றப்பட வாழ்வின் சவால்களை சந்திக்க உன் திட்டம் என்ன? படிப்பு, மகிழ்ச்சி, உலகத்தால் மரியாதை மட்டுமே முக்கியம் என்ற திட்டங்களும்; அதை நோக்கிய சட்டமுமே உன்னை உந்துகிறதுதா? அல்லது, ஆவிக்குரிய உதவியை பெற, உன் சந்ததி அழியாமல் இருக்க, உன் குடும்பத்தில் உன்னால் என்ன திட்டம் நிறைவேறுகிறது.

உன் குடும்பம் பைபிளின் வழிமுறைகளில் மட்டும் வாழ்ந்து, பூமியில் விருத்தியடைய பரலோக பலனடைய வேண்டும். அதற்கு ஆவிக்குரிய உணவு, உடை, பயிற்சியுடன் தினசரி தவறாமல் நடக்க வேண்டும். ஆம் குடும்பத்தின் அநேக பிரச்சனைகள், குழப்பங்கள் தீர்ந்து, சமாதானம் மலர மகா ஞானம் நிறைந்த, எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த, எல்லா வல்லமையுள்ள தேவனாலே ஆகும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

நம்முடைய வாழ்வின் சவால்களை வசனத்தின் துணைகொண்டு சரிசெய்யலாம். பெண்ணே! வாழ்வின் எல்லா நிலையிலும், தேவனோடு தொடர்புகொள்ள, தேவன் நம்மோடு தொடர்புகொள்ள அவருடைய வார்த்தை மட்டுமே போதுமானது. தேவனையே எல்லாவற்றிற்கும் சார்ந்திருப்பதை தவிர்த்துவிடவோ: அல்லது புறக்கணித்துவிடவோ கூடாது. நமது முன் மாதிரியாக தேவனை வைக்க வேண்டும்.

வேதபாடப்படிப்பும், ஜெபமும் தேவனில் ஆழ்ந்த விசுவாசமும், நமது கவலை என்னும் சவாலையும், வாழ்வின் வெறுப்புணர்வையும் மாற்றி, நம் வாழ்விலும் சமாதானம் மகிழ்ச்சி உண்டாக்க உதவும். தினசரி வாழ்வில் வேதபாடபடிப்பு மற்றும் பிராத்தனைக்கு, நேரத்தை திட்டமிட்டு நீங்களும் உங்கள் குடும்பமும் தொடர்ந்து செய்ய வேண்டும்.

இன்றைய உலகில் நமது கிறிஸ்தவ வாலிப பெண் பிள்ளைகள் சந்திக்கின்ற பெரிய சவால் உடை நாகரிகம் என்ற பெயரில் பின்புறம் குறைந்த அளவு உடை, கீழே குறைவான உடை, டைட்ஸ் என்ற தோலுடன் ஒட்டிக்கொண்டுள்ள உடை, வயிற்றைக் காட்டுவது போன்ற உடைகள் போன்றவை. இப்படிப்பட்ட உடைகளை நாமும், நம் பிள்ளைகளும் அணியும்படியான சோதனைகள் வரும்போது, இந்த சவாலை சந்திக்க மற்றும் மேற்கொள்ள என்ன திட்டம் உங்களிடம் உள்ளது. 'இதிலென்ன இருக்கிறது?' 'எந்த உடை உடுத்தினால் என்ன?' என்ற மேம்போக்கான மனோநிலை நம்மிடம் காணப்படுகிறதா? பெண்ணே, உனது உடை உனது உள்ளத்தை வெளிப்படுத்துகிறது என்பதை மறந்துவிடாதே!

நமது பிள்ளைகளிடம் அன்பும், கரிசனையும் சேர்ந்து வேதபோதனை கட்டாயம் போதிக்கப்படவில்லையானால், அதன் விளைவை நாம் மட்டுமல்ல நம் பிள்ளைகளும் சந்திப்பார்கள். தாவீதின் வாழ்வில் நடந்ததை நினைவில்கொள்ளுங்கள் (2 சாமு 11:2–27). பாவம் என்பது வளரும் மற்றும் பெருகும்; ஆகையால் உங்கள் பிள்ளைகளை எச்சரிக்க மறவாதிருங்கள்.

சகோதரிகளே! உங்களுக்கான அடுத்த மிகப்பெரிய சவால் நாவை அடக்குவது. யாக். 3:8 "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது."

ஆம்! நாவு அடங்காதது. குறிப்பாக, பெண்கள் இன்னொரு பெண்ணைப் பற்றி பொதுவாக கூறுகின்ற வார்த்தை 'வாயாடி' என்பதாகும். அதாவது, வாயாலேயே எல்லாம் பேசி சமாளிப்பதை, சாதிப்பதை இப்படி சொல்வீர்கள் அல்லவா?

நான் யதார்த்தத்தை பேசினேன் என்று கூறும் பெண்ணே, அதனுடைய விளைவு என்னவாக இருக்கும் என்றும் என்ன பாதிப்பை பிறருக்கு ஏற்படுத்தும் என்றும் நினைத்துபார்க்காமலே பேசிவிடும் பேச்சுக்கள் குறித்து, மிக கவனமாயிருங்கள்.

பிறரைப் பற்றி அவர் இல்லாத போது பேசுவது (புறணி) பாவம். ஒரு பெண், தான் பேசவில்லை என்றாலும், அப்படி பேசுபவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்கள் பேசுவதை கேட்பதும் மிகப் பெரியபாவம் ஆகும். ஆகையால், நாமாக மனமுவந்து அப்படிப்பட்ட காரியங்களை புறக்கணித்து, நமக்கான சிலுவையை சுமந்து, அனுதினமும் கிறிஸ்துவை பின்பற்றுவோம். மத். 10:38 "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல."

## 2. ஒரு கிறித்தருவ மனைவியாக சவால்களை சந்திப்பது

**- Meeting the Challenges as a Christian Wife.**

வெற்றி நிறைந்த திருமண வாழ்விற்கு, பரலோக தேவனுடைய அளவிட முடியாத ஞானம் நம்மை வழி நடத்துவது மிகப் பெரும் உதவியாகும். அதற்கான பரலோக தேவனுடைய ஆலோசனைகள் தெளிவாக உள்ளது. எபே 5:24–25 "ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்." "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து" கணவனுக்கு கீழ்படியுங்கள் என்று சொல்வதினால், மனைவி என்பவள் அடிமையல்ல; மாறாக, அது மனைவிக்கான தேவ சட்டம்.

ஆதி 2:24 "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்." பரலோக கடவுள் முன்பு ஆரம்பித்த மகிழ்ச்சியான திருமண (குடும்ப) வாழ்வில், தேவனுக்கு ஆராதனை செய்யும்படியாக கூடிவாழும் திருமண வாழ்வில், அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கிறித்தவ கணவனும் மனைவியும், தாங்கள் ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பை, கரிசனையை வெளிப்படுத்தும்படி பகிர்ந்து கொள்ள வேண்டும்.

கணவன் – மனைவி உறவில் இருவரும் பரலோக கடவுளை முதலில் வைத்து, என்ன செய்தால் அவரை சந்தோஷப்படுத்த முடியும் என்று இருவரும் வாழ்ந்தால், கணவன் மனைவி இடையிலான பிணக்குகளை சரி செய்யலாம். காரணம், பரலோக கடவுளுக்கு முதலிடம், என்னை சார்ந்த இந்த உறவுக்கு இரண்டாம் இடம், மூன்றாவது தான் 'நான்' என்று இருவருமே வாழ கற்றுக்கொள்வார்கள்.

கணவன் மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல் என்பது ஒரு கலை. பரலோக கடவுளின் படைப்பில் ஆண்வேறு பெண்வேறு என்றும், இருவரும் வேறுப்பட்ட தனித்தன்மையுடையவர்கள் என்றும் புரிதல் அவசியம். அவரவரை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்; இதுவும் சரியாக "புரிந்து கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும்,"

அநேக நேரங்களில் பெண்கள் "உணர்ச்சி" (Emotional) சார்ந்த நிலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், கணவன் வெளிக்காட்டும் உணர்வு பூர்வமான செயல்கள் குறைவானது. ஏனெனில்

பொதுவாக ஆண்கள், அக்கறை, பயம், ஆச்சரியம், இரக்கம் காட்டுதல் இவைகளில் ஒரு பெண் வெளிப்படுத்துவது போல உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை.

திருமண உறவில் முதலில் ஒருவரையொருவர், புரிந்து கொள்ள வேண்டும். பிறருக்காக தங்களை மாற்றிக்கொள்ள எதிர்பார்காதேயுங்கள்: கட்டாயப்படுத்தாதேயுங்கள். ஆண், பெண் இருவரும் தன்னை படைத்த கடவுளுக்காக, அவர் படைத்த நோக்கத்திற்காக தன்னை மாற்றவும், மாறி வாழவும் அவசியம் என்ற புரிதல் வேண்டும். **ரோமர் 14:7–8** "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும், கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்."

அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிய செய்யும் ஒவ்வொரு வேத படிப்பும், சவால்களை சந்திக்கும் அறிவைத் தரும். அதுவே ஒருவருக்காக ஒருவர் வாழ தானாக பழக்கிவிடும். எனவே ஒருவர் பிறரை மாற்ற வேண்டிய சிரமம் ஏற்படாது.

ஏனென்றால், வசனத்தைப் பயிற்சி செய்தால் கடவுள் தன் பக்கம் துணையாயிருப்பார் என்ற விசுவாசமும், வேத அறிவும், அதனோடு கீழ்படிதலும் மிக முக்கியம்.

குடும்பம் என்றால், ஒரு பெண் நினைப்பது போல, Ready Mix உப்புமா போல உடனடியாக உருவாவதல்ல; மாறாக, அது படிப்படியாக உருவாக்கப்பட வேண்டும்.

குடும்பத்தில் பிரச்சனை உருவாகும் போது, சவாலை சந்திக்க சில ஆலோசனைகள்.

1. சரி / தவறு என்ற நிலைக்கு இடையில், தேர்வு செய்வது தவறல்ல.

2. ஒரு காரியத்தை பற்றியோ, எந்தவொரு பிரச்சனையை பற்றியோ, அல்லது ஒத்துப்போகாத கருத்தைப் பற்றியோ பேசப்போகும் முன்பு, கொஞ்சம் யோசித்து பார்க்க நேரம் எடுத்துக்கொள்ளவும்.

3. சேர்ந்து உட்கார்ந்து, அமைதியாக புரிந்துக்கொள்ளும் நிலையில் பிரச்சனைகளை ஆலோசியுங்கள். பெண்ணே! ஆண் மகனுக்கும் பேச இடம் கொடுங்கள், நேரம் கொடுங்கள்.

4. பரலோக கடவுளையும், பைபிளையும் நம்பும் எந்த பெண்ணும், கணவன் எடுக்கும் இறுதி முடிவை ஏற்றுக்கொண்டு, தன்னை படைத்த கடவுள் வாக்கை மதித்து, இச்செயல் மூலம் பரலோக தேவன் தந்த தலைமைத்துவத்தை மதிப்பவராக இருக்க வேண்டும்.

5. பெண்ணே! பொறுத்துக்கொண்டு, "மன்னிப்பு" என்று சொல்லப் பழகுங்கள்.

6. பெண்ணே! கோபப்படு; அதினால் பாவம் செய்யும் அளவு இடம் கொடுத்துவிடாதே!

**சங் 4:4** "நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ் செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்." சபிக்காதே, புலம்பாதே, சண்டைபோடாதே, கூச்சலிடாதே, வெறுப்பு நிறைந்த வார்த்தைகளை பேசாதே. தேவன் பரலோகிலிருந்து நம் வார்த்தைகளை காது கொடுத்து கேட்கிறார்.

சாத்தானும் கவனித்து, அவன் விரும்பும் வார்த்தைகளை, செயல்களை செய்பவரை தன் மகிமைக்கு பயன்படுத்திக்கொள்வான் . சில வார்த்தைகளே, பல நேரங்களில் சிறிய பிரச்சனைகளை ஊதிப் பெரிதாக்கி விடுகிறதுமாயிருக்கிறது.

7. தேவையான இடத்தில் ஒத்துபோங்கள்.

8. மன்னியுங்கள்! அன்றன்று நடந்ததை அன்றன்றே மறந்து விடுங்கள். இப்படி ஒரு சம்பவம் நடந்ததே இல்லாது போல், மறந்துவிடுங்கள்.

9. மிக மிக முக்கியமான சவால்களை சந்திக்க ஞானமும், பலனும் பெற தேவ வசனத்தினிடம் ஆலோசனை பெற்று அதின் படி செய்யுங்கள்.

அநேக பிரச்சனைகள் கணவன் வீட்டார் மூலமே அதிகம் வரும். காரணம் புரிந்து கொள்ளாமையும், ஒத்துழையாமையுமே! அநேக நேரம் உடன் பிறந்தோரிடம் திருமணத்திற்கு முன்பு போராடி, பொறாமைப்பட்ட சுய நல குணங்களே, புதிய குடும்ப வாழ்விலும் தொடர்கின்றதை ஒரு பெண் (மனைவி) புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, சிறு பெண்ணாக வாழும் போதே உறவுகளை கட்டி வளர்க்கும் பெண்ணாக வளர்வது குடும்ப வாழ்விற்கு வழிகாட்டும். கணவனிடம் அன்பு எதிர்ப்பார்க்கும் பெண்ணே! பொறாமையற்ற சுய நலமில்லா அன்பை முதலில் கொடுங்கள். விதைப்பதை அறுப்போம். "...மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்"... **மத் 7:12**

அன்பு என்பது பரம தேவனால் மனித குலத்திற்கு கொடுக்கப்பட்ட அருமையான உணர்வு அது பிறரிடம் கொள்ளும் விவரிக்க முடியாத உணர்வு; இயேசுவை பார்த்தால் அவரின் வல்லமையுள்ள அன்பு, முன்மாதிரி நிறைந்தது. ஏனெனில் நேசிப்பவர்களுக்காக கடுமையான பாடுகளை உவந்து ஏற்றார் **(ரோமர் 5:5–8).**

அன்பு – மனம் உவந்தது;

அன்பு – மிருதுவானது;

அன்பு – பகிர்வது;

அன்பு – கொடுப்பது;

அன்பு – பாதுகாப்பது;

அன்பு – சுயநலமில்லாதது;

அன்பு – புரிந்துகொள்ளும்;

அன்பு – ஒத்து போகும்;

அன்பு – மகிழ்ச்சியானது;

அன்பு – மன்னிப்பது;

அன்பு – நம்பிக்கையை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – கனவுகளை பகிரும்;

அன்பு – வியாதியில் பகிரும்;

அன்பு – பாரத்தை பகிரும்;

அன்பு – பயத்தை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – தோல்விகளை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – வெற்றியை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – மகிழ்ச்சியான நிலையை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – பிரச்சனைகளை பகிர்ந்துகொள்ளும்;

அன்பு – அன்பை பகிர்ந்துகொள்ளும்;

வாழ்வின் சவால்களை சந்திக்க, அன்பு சுயநலமற்றிருந்து எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுக்கும். திருமண வாழ்வில் உடல் ரீதியான உறவை சாதரணமாக எடுத்துக்கொள்ளாமல், அந்த உறவில் பரிசுத்தமும் மரியாதையும் பாதுகாக்கப்பட வேண்டும். அது அந்த உறவை அழகாக்கும்.

### 3. ஒரு கிறிஸ்தவ தாயாக சவால்களை சந்திப்பது

**- Meeting the Challenges as a Christian Mother.**

பெண்ணே, தேவனன் நம் பிள்ளைகளுக்கு நல்ல சுத்தமான வேர்களை ஒரு தாய் மூலம் கொடுக்க விரும்புகிறார். ஆழமான, உறுதியான, நல்ல நிலத்தில் வேர் ஊன்றிய செடியே நல்ல விளைச்சல், விருத்தி அடையும். **ரோமர் 10:16** "மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்."

வீட்டில் நல்ல பேச்சுக்களே அன்றி வீணான வார்த்தைகளை பேசாதபடி உங்கள் குடும்பத்தை பேணி பார்த்துகொள்ளுங்கள், நல்லவைகளை ரசிக்க ருசிக்க கற்றுக்கொடுங்கள். வீட்டில் உள்ள ஒவ்வொருவரிடமும் நல்ல எண்ணங்களோடும், உறவுகளோடும், திருப்தியோடும், விட்டுக்கொடுத்தும் வாழ, தாயே நீயும் பழகு. உன் செயல் மூலம் போதித்து உங்கள் பிள்ளைகளையும் செய்ய வையுங்கள். அது உன் வீடு; உன் இரத்தம்; விதைப்பது தான் விளையும் என்பதை நினைவில்கொள்ளுங்கள். **எபே 4:29** "கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்கும் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்."

தாயே! நீ சரியாக விதைக்க மறந்தால், வேறுயாரோ உன் குடும்பம் என்னும் நிலத்தில் எதையோ விதைப்பார்கள். அதை நீதான் அறுவடை செய்வாய். சாமுவேலுக்கு அவன் தாய் நல்லவைகளை கற்றுகொடுத்ததைப் போல (நீதி 31), தீமோத்தேயுக்கு ஐனிக்கேயாள் (2தீமோ 1) கற்றுகொடுத்ததைப் போல நல்லவைகளையும், விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும், தேவ பயத்தையும் கற்றுக்கொடுங்கள். அவர்களுக்கு நல்ல படிப்பு, சூழல்களை தருவது போல, நல்ல ஆவிக்குரிய நட்புகளையும் கொடுங்கள்.

யோகெபேத்தை போல மோசேயை, அன்னாளைப் போல சாமுவேலை உருவாக்குங்கள். எல்லாம் உங்கள் கைகளிலிருக்கிறது. உங்கள் பிள்ளைகள் உங்களிடமிருந்தே முதலாவது நிறைய காரியங்களை கற்றுகொள்ளுகிறார்கள். உங்கள் பேச்சுக்களும், செயல்களுமே அவர்கள் வாழ்வில் மிகவும் செல்வாக்கு மிகுந்தது. உங்கள் அன்பினால், கண்டிப்பினால், முன் மாதிரியினால் அவர்களை தேவனுக்கு உகந்தவர்களாக உருவாக்குங்கள். இந்த தெய்வீக முயற்சியில், நீங்கள் சந்திக்கின்ற உங்கள் சவால்களில் துணையாக தேவனை வைத்துக்கொள்ளுங்கள். வெற்றி உங்களுடையதே! ஒரு கிறித்துவ பெண்ணாக, மனைவியாக, தாயாக வெற்றி பெற என் அன்பின் வாழ்த்துக்கள்!

**– அன்புடன் ஆசிரியர்**

# சுத்திகரித்துக் கொள்ளுங்கள்

PAULA BATES



1. தங்கள் அழுக்கற ........................................................ தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற ...................... (நீதிமொழிகள் 30:12).

2. ......................உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும்......................வெண்மையாகும், அவைகள் .................................... பஞ்சைப் போலாகும் (ஏசாயா 1:18).

3. நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ......................................... நீக்குவேன் (ஏசாயா 1:25).

4. ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் ................................ வையாதே. மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே. உன்னைச் ...........................................காத்துக்கொள் (1 தீமோத்தேயு 5:22).

5. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், ......................................... உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ......................... (II தீமோத்தேயு 2:21).

6. தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே உங்கள் கைகளைச் ........................................ இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் ................................. (யாக்கோபு 4:8).

7. அவர்மேல் இப்படிப்பட்ட ...................................... வைத்திருக்கிறவனெவனும், அவர் .................................. தன்னையும் சுத்திகரித்துக் கொள்கிறான் (I யோவான் 3:3).

பொதுவான செய்திகள்

## தமிழ் பழமொழிகள் அறிவோம்

1) கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசம்!.. (சரி)
கழுதைக்குத்தெரியமா கற்பூரவாசம்! ( தவறு )

'கழு' ஒருவகையான கோரைப்புல். அதில் தைக்கப்படும் பாயில் படுக்கும் போது நாசியில் கற்பூர வாசனை அடிக்கும். குழந்தைகளை அந்த பாயில் படுக்கப்போட்டால் பூச்சிகள் கிட்டே வராது...

மற்றபடி கழுதைக்கும் மாட்டுக்கும் இச்சொற்றொரோடு தொடர்பே இல்லை காலத்தால் மருவியதே!

2) 'ஆனைக்கு ஒரு காலம் வந்தால், 'பூனைக்கும் ஒரு காலம் வரும்'.

இப்பழமொழிக்குக் காலம் காலமாகக் கூறப்பட்டு வரும் விளக்கம் இதுதான்:

ஆனை போல பெரியவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல காலம் வந்தால் பூனை போல சிறியவர்களுக்கும் அவரது வாழ்வில் ஒரு நல்ல காலம் வரும்.

3) பாத்திரம் அறிந்து பிச்சை இடு!

தமிழ்நாட்டில் புழங்கிவரும் பல பழமொழிகளில் இதுவும் ஒன்று. வழக்கம்போல இந்தப் பழமொழியிலும் எழுத்துப் பிழையால் இதன் பொருள் தவறாகக் கூறப்பட்டு வருகிறது.

இப்போது நாம் பயன்படுத்தும் 'பிச்சை' என்னும் சொல்லுக்கு அக்காலத்தில் "பரிசு" என்று பொருள். ஏன் தெரியுமா? மன்னன் பிச்சையாகப் போடும் பொருள் தான் புலவனுக்குக் கிடைக்கும், பரிசு ஆகும். அதைப் பெறுவதற்கு அந்தப் புலவன் மன்னனைப் புகழ்ந்து பாடவேண்டும். எவ்வளவு உயர்வாக புகழ்ந்து பாடுகிறானோ, அதற்கேற்ப அவனுக்குப் பரிசுகள் கிடைக்கும். இப்படிப் புகழ்ந்து பாடுவது தான் புலவர்களின் 'திறமை' யாகக் கருதப்பட்டது. புலவனின் பாடும் திறம், அதாவது திறமையை அறிந்தே அக்காலத்தில் அவனுக்கு பிச்சை, அதாவது, பரிசுகளைக் கொடுத்தனர் மன்னர்களும் சிற்றரசர்களும். இதன் அடிப்படையில் தான் இந்தப் பழமொழியும் உண்டானது. காலப்போக்கில் ஒரே ஒரு எழுத்து மாற்றத்தால், அதவது 'ற' கரத்திற்குப் பதிலாக, 'ர' கரத்தைப் போட்டதால், பொருளே மாறிப்போய் ஒரு வரலாற்றுச் செய்தியே அதற்குள் முடக்கப்பட்டு விட்டது.

உண்மையான பழமொழி இது தான் : 'பாத்திறம் அறிந்து பிச்சை இடு'

(பாத்திறம் = பா + திறம் = பாடும் திறமை)

# மனந்திரும்புவதிலிருந்து பெருமை உங்களைத் தடுக்கிறதா?

## IS PRIDE PREVENTING YOU FROM REPENTING?

**JERRY BATES**



மனந்திரும்புதலை தேவன் எப்போதுமே எதிர்பார்க்கிறார். ஒவ்வொரு தீர்க்கதரிசியின் மையச்செய்தியாக, மனந்திரும்ப வேண்டுமென்ற கட்டளை இருந்தது. அதுபோலவே, உதாரணமாக, **எசேக்கியேல் 14:6–ல்,** எசேக்கியேல், இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து, திரும்புங்கள், உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கட்டளையிட்டார். நினிவே பட்டணம், மனந்திரும்பும்படியாக எழுத்துப்பூர்வமான எந்தவொரு கட்டளையும் இல்லை. இருந்தபோதிலும், நினிவே யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பியது. யோனா மனந்திரும்புதலைப் பற்றி பிரசங்கித்திருக்கிறார் என்றே இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது.

இயேசு கிறிஸ்து மற்றும் யோவான் ஸ்நானகனுடைய மையச் செய்தி மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதே. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று சொல்வதின் வாயிலாக எல்லோருமே மனந்திரும்ப வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார் **(லூக்கா 13:3).** அதாவது, மனந்திரும்புங்கள்! இல்லையென்றால் கெட்டுப்போவீர்கள் என்று ஜனங்களுக்கு முன்பாக ஒரு தெரிந்துகொள்ளுதலை வைக்கிறார். அதேவிதமாகவே, அப்போஸ்தலர்களும் மனந்திரும்புதலின் அவசியத்தைக் குறித்துப் பிரசங்கித்திருக்கிறார்கள். ஆம், பேதுரு அப்போஸ்தலன் தமது வாக்கியங்களில், தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் **(2 பேதுரு 3:9)** என்று எடுத்துரைத்துள்ளார்.

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற கட்டளைகளில் மனந்திரும்புதல் என்பது கடினமான கட்டளையாகும். இதைக்குறித்து J.W. MC Garvey என்பவர் குறிப்பிடும்போது, மனித இரட்சிப்பின் மிகப்பெரிய தடை மனிதனுடைய பிடிவாதம்தான் என்றார். உண்மையாகவே, மனந்திரும்புதல் கீழ்ப்படிவதற்குக் கடினமான கட்டளைதான். ஏனென்றால், மனந்திரும்புதலுக்கு முழுமையான மாற்றம், அதாவது, விருப்பம், விவேகம் மற்றும் உணர்வுகளில் மாற்றம் தேவைப்படுகிறது. இத்தகைய முழுமையான மாற்றத்தை மனிதனுக்குள்ளாகக் கொண்டு வருவதென்பது கடினமான காரியமாகும். இந்த மனந்திரும்புதல் கடினமான ஒன்றாக இருப்பதால்தான் பலர் அதைக்குறித்துப் பிரசங்கிக்கத் தவறுகிறார்கள்.

இத்தகைய மாற்றத்தைச் செய்வது மனிதனுக்குக் கடினமான ஒன்றாக ஏன் மாறிவிட்டது? இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். மனந்திரும்புதல் என்பது, தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும் முழுமையாக அர்ப்பணிப்பதும், சமர்ப்பிப்பதையும் உள்ளடக்கியதாகும். ஒருவரிடம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்பது கடினமான காரியமாகும். ஜனங்களில் அநேகர் தங்களைத் தேவனுக்கு முழுவதுமாக அர்ப்பணித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால், தங்கள் வாழ்க்கையில் அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் வந்துவிட்டால், அந்தச் செயல்பாடுகளை மறந்து விடுகிறார்கள். இப்படிச் செய்வது உண்மையான அர்ப்பணிப்பு அல்ல.

மனந்திரும்புதல் மிகவும் கடினமான ஒன்றாக இருந்தாலும், அதற்கு முழுமையான மாற்றம் அவசியப்படுகிறது. இங்கே மனந்திரும்புதல் என்பது, ஒருவர் தன்பாவங்களை ஒன்றன்பின் ஒன்றாக விடுவதற்கு அது ஒரு படிப்படியான செயல் அல்ல. மாறாக, ஒருவர் தனது பாவங்களை முற்றிலுமே விட்டுவிடுவதாகும். இப்படிச் செய்வது ஒருவர் மறுபடியும் பாவமே செய்யமாட்டார் என்றோ, அல்லது பழைய பாவத்தைச் செய்ய மாட்டார் என்றோ பொருள்படாது. ஆனபோதிலும், பாவத்தைக் குறித்ததான அவருடைய மனநிலை முற்றிலும் மாறியிருக்கும். பெரும்பாலான மக்கள் தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லுகிறார்கள்.


ஆனால், குறிப்பிட்ட ஒன்றிரண்டு பாவங்களை விடாமல் பிடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட செயல்பாடு மனந்திரும்புதலும் அல்ல, கிறிஸ்துவைப் பிரியப்படுத்துகிற காரியமும் அல்ல. எபேசு பட்டணத்தில் மாயவித்தையில் ஈடுபட்டிருந்தவர்களில் பலர் சுவிசேஷத்தைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டபோது, அவர்கள் மாயவித்தைக்குப் பயன்படுத்திய புத்தகங்களைக் கொண்டுவந்து எரித்து விட்டார்கள் **(அப். 19:19).** பவுல், **2 கொரி. 5: 17–ல்,** இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின என்று குறிப்பிடுகிறார்.

அநேக ஜனங்களுக்கு, அறிக்கை செய்வது ஒரு சவாலான காரியமாகும். உண்மையான மனந்திரும்புதலுக்கு மிகப்பெரிய தடை, 'பெருமைதான்'. ஏனென்றால், இந்தப் பெருமைதான் நம் பாவங்களை நாம் ஒத்துக் கொள்ளாதபடிக்கு நம்மைத் தடுக்கிறது. நாம் தவறுகளை ஒத்துக்கொள்ள விரும்பினாலும் கூட, அந்நேரத்தில் சில சாக்குப்போக்குகளையும் சொல்லுகிறோம். இப்படிப்பட்ட சாக்குப்போக்குகள், பெரும்பாலும் நாம் செய்ததை நியாயப்படுத்துவதாகவே இருக்கும். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் இதே மனநிலையிலிருந்தால் இதே காரியத்தைத்தான் செய்வார்கள் என்று நினைக்கிறோம்; அல்லது, அவர்களும் அப்படி நினைக்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

சில கலாச்சாரங்களின் வழக்கப்படி ஒருவருடைய பாவத்தை சபையில் அறிக்கையிடுவது அரிதான காரியமாகும். அதற்கான காரணம் ஒருவர் தன்னுடைய வாழ்கையில் நடந்த பாவத்தை வெளிப்படையாக அறிவிக்கும்போது, அது அவருக்கு அவமானத்தைக் கொண்டு வந்துவிடும் என்பதாகும். 'பெருமை' பெரும்பாலும், மனிதனிடம் தேவன் விரும்புவதை செய்யத் தடுக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், இப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய விருப்பத்தைவிட, மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதுதான் முக்கியமாயிருக்கிறது. ஆனால், பாவங்களை வெளிப்படையாக அறிக்கையிடுவது உண்மைக் கிறிஸ்தவர்களை ஒருபோதும் வெட்கப்படுத்தாது. ஒருவர் வெளிப்படையாகத் தன்னுடைய பாவங்களை வெளிப்படுத்தும் போது மற்றவர்களும் அதைப்பார்த்து அறிக்கையிடுவதற்கு தைரியமும், உற்சாகமும் அடைவர். பாவங்களை நான் அறிக்கையிட்டாலும், அறிக்கையிடாவிட்டாலும் நம் எல்லோருக்குமே பாவத்தோடு பிரச்சனை இருந்துகொண்டேதான் இருக்கிறது. ஆகவே, நமக்கு உண்மையுள்ள கிறிஸ்தவர்களுடைய உதவியும், உற்சாகமும் அவசியமாயிருக்கிறது.

எல்லாரும் பாவம் செய்து அதோடு போராடிக் கொண்டிருக்கிறபடியால், நாம் பாவத்தை அறிக்கையிடுவதற்கு ஒரு போதும் வெட்கப்படவோ, பயப்படவோ கூடாது. அப்படிச் செய்யும்போது நமக்கு மற்றவர்களுடைய உதவி கிடைப்பது மாத்திரமல்ல, உதவிகளின் ஊற்றாயிருக்கிற உன்னதருக்கும் அது பிரியமான ஒன்றாக இருக்கும். ஆகவே, தேவன் எதைச் செய்யும்படியாகச் சொல்லியிருக்கிறாரோ அதைச்செய்ய பெருமை ஒரு தடையாக இருக்க, ஒருபோதும் நாம் அதை அனுமதிக்கக்கூடாது. மாறாக, அறிக்கையிட்டு ஆண்டவரை நோக்கிப் பார்த்தால், நித்திய வீட்டிலே சுகித்திருக்க முடியும். ஆகையால், பெருமையைக் களைவோம். பரத்தினை அடைவோம்!

## J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சி பள்ளி – மாணவர் கருத்து...



J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சி பள்ளியில் பயில ஆரம்பித்த பின்பு, நான் அதிகாலையில் வசனத்தை படித்து, ஜெபிக்காமல் எந்த வேலையும் செய்வதில்லை. இந்த பயிற்சிப் பள்ளி, சபையைப் பற்றியும், ஊழியத்தைப் பற்றியும் எனக்குள் இருந்த சாதாரண எண்ணத்தை மாற்றி, அவைகளின் அவசியத்தை மற்றும் மேன்மையை உணர்த்திவிட்டது. ஒரு சாட்சியுள்ள கிறிஸ்தவனாக எல்லாவற்றிலும் கிறிஸ்துவை முதன்மைபடுத்தி, அவருடைய பணிக்கென்று அதிகம் கொடுக்க (காணிக்கை) கற்றுக்கொண்டு செய்கிறேன். இப்பள்ளியில், தினசரி ஒருத்தருக்காவது சுவிசேஷத்தை சொல்லவேண்டும் என்று கற்றுக்கொண்டதை, இப்பொழுது பயிற்சி செய்கிறேன். இதை என் வாழ்வின் கடைசிவரை செய்வேன்.

– நிம்மி சுரேஷ் (அரக்கோணம்)
J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப்பள்ளி மாணவர்

# சோதோமும் கொமோராவும்

## SODOM AND GOMORRAH

BETTY CHOATE



வேதாகமத்தில் நடந்த சோகச் சம்பவங்களில், சோதோம் கொமொராவில் நடந்த சம்பவமும் ஒன்றாகும். நோவாவின் நாட்களில் வாழ்ந்த ஜனங்களைப் பற்றிச் சொல்லும்போது, மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் வாசிக்கிறோம். சோதோமின் ஜனங்கள் குருடாக்கப்பட்டும் கூட பாவப்பசி அவர்களை ஆட்கொண்டு, அவர்கள் தங்கள் ஆசைகளை அடக்கிக்கொள்ள முடியாமல், தீமையைத் தங்கள் மேல் குவித்துக்கொண்டார்கள்.

சத்தியத்தை அறிந்தவர்கள் நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, நீதியைப் போதிக்கும் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். அதன் மூலம், சுற்றிலும் இருப்பவர்களிடத்தில் தேவனுடைய ஒளியைக் கொண்டு வரும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். லோத்து தேவனையும் சோதோமின் அக்கிரமங்களையும் அறிந்திருந்தபடியால், நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக்கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டார். அவர் நீதிமானாயிருந்தபடியால் அக்கினி மற்றும் கந்தகத்தினால் சோதோம் கொமோரா பட்டணங்கள் அழிக்கப்பட்ட போதும் அவர் காப்பாற்றப்பட்டார்.

ஆனால், லோத்தின் சம்பவத்தை பிற்பாடு யோசித்துப் பார்த்தால் பரிதாபகரமானதாயிருக்கிறது. லோத்து, சோதோமில் வாழ்ந்த நாட்களில் அவர் மூலமாக தேவனை அறிந்தவர்களைப் பற்றி நமக்கு எந்தத் தகவலும் இல்லை. அப்பட்டணத்தில் அக்கிரமங்களைக் கண்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் அவர் வாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, சோதோம் பட்டணத்தார் பொல்லாப்பு செய்யும்படி லோத்தின் வீட்டை முற்றுகையிட்ட போது, கோழைத்தனமாக தன்னுடைய குமாரத்திகளை அவர்களுக்கு கொடுத்தபோது, அவர்களுடைய தேவைகளோடு அவர் சமரசம் செய்து கொண்டார். அவருடைய தேவபக்திகேற்ற தைரியம் எங்கே? பிள்ளைகளுடைய வாழ்க்கை பாழாய்ப்போவதைவிட அவர் மரிக்கத் துணிந்திருக்கலாமே.

லோத்து புறஜாதிகளின் மத்தியில் வாழ்ந்தபோதிலும், தன் குமாரத்திகளை தேவபக்தியுள்ள மருமகன்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. தேவனை அறியாதவர்களுக்குத்தான் தன் மகள்களை கொடுக்க முன்வந்திருக்கிறான். இது உலகத்தோடு மற்றொரு சமரசமாகும். லோத்து தன்னுடைய மருமகன்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை; அவர்களுடைய பார்வையில் இவர் பரியாசம் பண்ணுகிறவர்களாகத் தெரிந்தார். எனவே, அவர்கள் இழந்து போனார்கள். பின்பு லோத்துவும் அவனுடைய குமாரத்திகளும் மலையில் வாசம் செய்த போது, சோதோமின் மோசமான மாம்சீகச் சூழலின் தாக்கம் எந்த அளவு இருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. லோத்தின் குமாரத்தி, மதுபானம் பருக உற்சாகப்படுத்திய போது, அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்காமல், மதுபானம் குடித்து, தன் மகள் தன்னோடு தவறான உறவு கொண்டதைக்கூட அறியாதவனாக, உணர்வற்றவனாகக் கிடந்தான். அதுமட்டுமல்ல, தனது இரண்டாவது மகளும் அவ்விதமாக செயல்பட்டதைக்குறித்து கூட உணர்வற்றவனாய் காணப்பட்டான். இப்பாவத்தின் விளைவாகத்தான் மோவாபியரும், அம்மோனியரும் உருவானார்கள்.

### இங்கே கருத்து என்ன?

இங்கே லோத்துக்கும் அவரைச் சுற்றிலுமிருந்த உலகத்திற்கும் என்ன தொடர்பு இருந்ததோ, அதேப் போல் தான் இன்று நமக்கும் நம்மைச்சுற்றிலும் உள்ள உலகத்திற்கும் இடையே தொடர்பு இருக்கிறது.

நம் உலகத்திலுள்ள ஓரினச் சேர்க்கைக்காரர்கள் குருட்டாட்டத்தினால் பாதிக்கப்படுவதில்லை; ஆனால், எய்ட்ஸ் வியாதியில் தாக்கப்படுகிறார்கள். தங்கள் இக்கட்டான சூழ்நிலையிலும் கூட, தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள அவர்களுக்கு பயமில்லை. அவர்கள் தங்கள் முன்னோர்களைப் போல, பாவ வாசலைத்தேடி கண்டுபிடிப்பதில்தான் அலுத்துப்போகிறார்கள். இன்றும் பலர் தங்கள் உச்சக்கட்ட இச்சையை அடக்கமுடியாமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஓரினச்சேர்க்கை மாற்று வாழ்க்கை முறையாக அங்கீகரிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டிருக்கிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர், அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர் இதற்கு பலியாயிருப்பது பலருடைய புருவங்களை உயர்த்தியிருக்கிறது. மனித மிருக உறவு முறை, குடும்ப அங்கத்தினர்களிடையே தவறான உறவு முறை போன்றவைகளைக் குறித்து இன்றைய நாட்களில் அதிகமாகப் பேசப்பட்டு, பலர் அதில் ஆர்வமாகயிருப்பது நமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. இத்தகைய பாவங்களைச் செய்பவர்களை நாம் ஒதுக்கி வைத்தால், வெறுப்பின் அடிப்படையில் பாவம் செய்பவர்கள் என்று முத்திரை குத்திவிடுகிறார்கள்.

எவ்வித கூச்சமும், நாணமுமின்றி பலர் திருமணம் ஆகாமலேயே குடும்பம் நடத்துகின்றனர். உறவுகளையும், நட்புகளையும் அழைத்து விழா வைத்து மகிழும் வாழ்க்கையை அவர்கள் தொலைத்து விடுகிறார்கள். ஆணும் – ஆணும், பெண்ணும் – பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் முறை பெருகி, இதற்கு பல நாடுகள் சட்டப்பூர்வமாக அங்கீகாரமும் வழங்கி வருகின்றன. அடுத்த கட்ட நடவடிக்கை பலதார முறையை பல நாடுகள் ஏற்றுக்கொள்ளுமோ என்று தோன்றுகிறது.

நாம் வாழும் உலகில் பாலியல் சம்பந்தமான பாவங்கள் பெருகி, ஒழுக்கம் சீர்கெட்டுப் போய்விட்டது. சிறு பிள்ளைகளுக்கு கூட பாலியல் பாடங்கள் என்னும் போர்வையில், பாலியல் சம்மந்தமான பலதரப்பட்ட காரியங்கள் போதிக்கப்படுகின்றன. பெரும்பாலான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும், அநேகமாக எல்லா விளம்பரங்களும் ஆபாசத்தை அடிப்படையாக வைத்தே எடுக்கப்படுகின்றன.

இன்று நாம் வாழும் சமுதாயத்தில் பச்சிளங்குழந்தைகள் கொடூரமான முறையில் பலாத்காரம் செய்யப்பட்டு, கொலை செய்யப்படுகிறார்கள்; பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளைக் கொன்றுவிட்டு பின்பு மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்று விடுவிக்கப்படுகிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்களைக் கொலை செய்கிறார்கள். இளைய தலைமுறையினர் மத்தியில் வன்முறை தலைவிரித்தாடுகிறது. அவர்கள் நாட்டுச் சட்டத்தையும் மதிப்பதில்லை, தேவனுடைய சட்டத்தையும் மதிப்பதில்லை. இச்சந்ததி தங்கள் கட்டுப்பாட்டில் இவ்வுலகை வைத்திருக்கும் போது என்னவெல்லாம் நடக்குமோ என்று நினைக்கையில் நம் மனம் நிலைகுலைந்து போகிறது.

"இன்றும் தீர்க்கதரிசிகளின் நாட்களைப் போல் சில காரியங்கள் திரும்பத்திரும்பச் சொல்லப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்!"

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m. ***Nambikai TV : Every Sunday 3.30 p.m.*** (Contact : ***92 4421 4421 & 92 4431 4431)***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV :** Every Saturday 8.00 - 8.30 p.m. **Tamilan TV :** Every Thursday 6.00 - 6.30 p.m (Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# ஏனோக்கு

அன்பான வாலிப தம்பிகள் மற்றும் தங்கைகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துக்கள்.

ஏனோக்கைப் பற்றி பைபிளில் அதிகமாக சொல்லப்படவில்லை. வெறும் மூன்று வசனப்பகுதிகளில் மட்டும்தான் அவரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதியாகமம் 5:21–24; எபிரெயர் 11:5; யூதா 14, 15) ஆனால், அந்த வசனங்களில் இருந்து அவர் எந்தளவுக்கு விசுவாசம் காட்டினார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறதா? சரியானதைச் செய்ய நீங்கள் போராட வேண்டியிருக்கிறதா? அப்படியென்றால், ஏனோக்கு காட்டிய விசுவாசத்தில் இருந்து நீங்கள் நிறைய கற்றுக்கொள்ளலாம்.

<u>'தேவனோடு ஏனோக்கு தொடர்ந்து நடந்தார்'</u>

ஏனோக்கு பிறந்தபோது இந்த உலகம் ரொம்ப மோசமாக இருந்தது. ஆதாமிலிருந்து அது ஏழாவது தலைமுறையாக இருந்தது. ஆதாம் ஏவாளுக்கு இருந்த அதே உடல் ஆரோக்கியம் இவர்களுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவு ஆரோக்கியமாக இருந்தார்கள். அதனால்தான், இவர்களால் ரொம்ப வருஷம் உயிர் வாழ முடிந்தது. இருந்தாலும் இவர்கள் ஆன்மீக விஷயத்திலும் ஒழுக்க விஷயத்திலும் படுமோசமான நிலைமையில் இருந்தார்கள். எங்கு பார்த்தாலும் வன்முறை நிறைந்திருந்தது. இது ஆதாமுக்கு அடுத்த தலைமுறையில், அதாவது இரண்டாவது தலைமுறையில் இருந்தே ஆரம்பித்துவிட்டது. காயீன் தன் சொந்த தம்பியைக் கொலை செய்தான். காயீனுடைய வம்சத்தில் வந்த ஒருவன் காயீனைவிட கொடூரமாக நடந்துகொண்டதை நினைத்து பெருமை அடித்தான். மூன்றாம் தலைமுறையில் நிலைமை இன்னும் மோசமானது. மக்கள், "யெகோவாவின் பெயரைக் களங்கப்படுத்த ஆரம்பித்தார்கள்."

ஏனோக்கு வாழ்ந்த காலத்தில் மக்கள் பொய் பேசுவதில் ஊறிப்போய் இருந்தார்கள். அதனால், ஊரோடு ஒத்துப்போவதா? அல்லது, வானத்தையும் பூமியையும் படைத்த உண்மை கடவுளான யெகோவாவை வணங்குவதா? என்று இளம் வயதிலேயே ஏனோக்கு தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தது. யெகோவாவுக்கு உண்மையாக வாழ்ந்ததால் கொல்லப்பட்ட ஆபேலை பற்றி அவர் கேள்விப்பட்டிருப்பார். ஆபேலின் உதாரணம் அவர் மனதை ஆழமாக தொட்டிருக்கும். அதனால், ஆபேலைப் போலவே இருக்க ஏனோக்கு தீர்மானித்தார். "அவர் உண்மைக் கடவுளுடைய வழியில் தொடர்ந்து நடந்துவந்தார்" என்று ஆதியாகமம் 5:22 சொல்கிறது. கடவுள் பக்தி இல்லாத மக்கள் நடுவில் ஏனோக்கு மட்டும் கடவுளை உண்மையாக வணங்கினார் என்று இந்த வசனத்திலிருந்து தெரிந்துகொள்கிறோம். பைபிளில் இப்படிச் சான்று பெற்ற மனிதர்களில் ஏனோக்கு முதல் இடத்தில் இருக்கிறார்.

மெத்தூசலா பிறந்த பிறகும் ஏனோக்கு தொடர்ந்து கடவுளோடு நடந்தார் என்று ஆதியாகமம் 5:22 சொல்கிறது. அப்படியென்றால், ஏனோக்கு இளம் வயதில் மட்டுமல்ல, ஒரு குடும்ப தலைவரான பிறகும் கடவுளோடு நடந்தார் என்று தெரிகிறது. அவருக்கு அப்போது சுமார் 65 வயது இருந்திருக்கலாம்; அவருடைய மனைவியின் பெயர், அவருக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தார்கள், என்றெல்லாம் பைபிளில் கொடுக்கப்படவில்லை. ஏனோக்கு ஒரு நல்ல அப்பாவாகவும் கணவனாகவும் குடும்பத்துக்கு தேவையானதைச் செய்திருப்பார். ஏனென்றால், அவர் கடவுள் விரும்பும் விதத்தில் தன் குடும்பத்தைக் கவனித்துக்கொண்டார். ஏனோக்கு யெகோவா எதிர்பார்த்தபடியே (ஆதியாகமம் 2:24) தன் மனைவிக்கு உண்மையாக இருந்தார். அதோடு, தன்னுடைய பிள்ளைகளுக்கு யெகோவாவைப் பற்றி சொல்லிக்கொடுக்க தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார்.

நீங்கள் ஒரு குடும்பத் தலைவராக இருந்தால் ஏனோக்குடைய விசுவாசத்தை எப்படிப் பின்பற்றலாம் என்று யோசித்துப்பாருங்கள். குடும்பத்துக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுப்பது முக்கியம்தான் (1தீமோத்தேயு 5:8). ஆனால், குடும்பத்தில் இருப்பவர்கள் கடவுள்பக்தியோடு இருக்க உதவுவதுதான் அதைவிட முக்கியம். நீங்கள் சொல்வதைவிட செய்வதைப் பார்த்து அவர்கள் அதிகம் கற்றுக்கொள்வார்கள். ஏனோக்கைப் போல நீங்களும் கடவுளோடு நடக்க விரும்பினால், கடவுளுடைய சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படியுங்கள். அப்போது, உங்களுடைய விசுவாசத்தைப் பார்த்து உங்கள் குடும்பத்தாரும் கடவுள்பக்தியோடு நடந்துகொள்வார்கள். இதுதான் நீங்கள் அவர்களுக்கு விட்டு செல்லும் உண்மையான சொத்து.

அன்புடன்
உங்கள் அண்ணன் – J.P

# தொடர் 28 பிலிப்பியர் : கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருத்தல்

### தலைப்பு

பெற்றுக்கொண்டவர்களின் பெயரைக்கொண்டு பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் பெயரிடப்பட்டுள்ளது. குறிப்பாக, இப்புத்தகம் பிலிப்பி நகரத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது (1:1).

### பின்னணி

பவுல், "மக்கதோனியா மனிதனின் அழைப்பிற்கு" (நடபடிகள் 16:9, 10) பதில்செயலான தமது இரண்டாவது சுவிசேஷப்பயணத்தின் போது, அவரும் அவரது தோழர்களும் மக்கெதோனியாவில் (இப்போது கிரேக்க நாட்டின் பகுதி) இருந்த ரோமக்குடியேற்றத்தின் முக்கியமான நகரான பிலிப்பிக்கு கடற்பயணமாய் சென்றனர். பிலிப்பி ஒரு பெரிய நகரமாய் இல்லாவிட்டாலும், வரலாற்றுத் தனிச்சிறப்புக் கொண்டிருந்தது. பவுல் சுவிசேஷத்துடன் அங்கு சென்றதால்தான் நம்மில் பெரும்பான்மையானவர்கள் இந்நகரைப்பற்றி அறிகின்றோம். நடபடிகள் 16, அங்கு பவுலின் ஊழியம்பற்றிச் சிலவிஷயங்களைக் கூறுகிறது; லீதியாள் மற்றும் அவள் வீட்டாரின் மனமாற்றம், அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டிருந்த பெண் குணமாக்கப்படுதல், மற்றும் சிறைச்சாலை அதிகாரியின் மனமாற்றம்.

பவுல் பிலிப்பி நகரைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபின்பு, அவர் அங்கிருந்த புதுக்கிறிஸ்தவர்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பைப் பராமரித்தார். அவர்கள் பவுல் பயணம் சென்றபோதெல்லாம், அவருக்கு உதவி அனுப்பினார் (1:5,15,16). அவர் தம்மால் இயன்றபோதெல்லாம், அவர்களைச் சென்று பார்ப்பதற்கு விசேஷ முயற்சிகளை மேற்கொண்டார்; அவர் இந்த சபையை மிகவும் நேசித்தார் (4:1). பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தபோது, அவர் பல ''சிறை நிருபங்களை" எழுதினார் (எபேசியருக்கு எழுதிய நிருபம் பற்றிய குறிப்புகளைக் காணவும்). அவற்றில் ஒன்று, போராடிக்கொண்டிருந்த பிலிப்பி நகரின் சபைக்கு எழுதப்பட்டதாகும் (1:1,7, 13, 14: 4:22). இது கி.பி. 60-62ல் எழுதப்பட்டது.

இந்தக்கடிதம் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தைப் போன்று, அடிப்படைக் கிறிஸ்தவ சத்தியத்தின் நெருக்கமான நியாயப்படுத்தப்பட்ட ஆய்வுகளை முன்வைப்பதற்கென்று எழுதப்படவில்லை. இது கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்களைப் போன்று, அடிப்படையில் உபதேச மற்றும் ஒழுக்கரீதியான தவறுகளைத் திருத்துவதற்கென்றும் எழுதப்படவில்லை. மாறாக, இது ஒரு தனிப்பட்ட கடிதமாகும்.

இதை எழுதுவதற்குப் பவுல் குறைந்தபட்சம் நான்கு காரணங்களைக் குறிப்பிடுகின்றார். முதலாவது, அவர்கள் ரோமாபுரியில் இருந்த அவருக்கு உதவி அனுப்பியிருந்தனர் (1:5: 2:25 முதல் 4:10, 18), மற்றும் அவர்களுக்கு அவர் நன்றி தெரிவிக்க விரும்பினார். இரண்டாவது, மரணத்திற்கு ஏதுவாக வியாதிப்பட்டிருந்த எப்பாப்பிராதீத்து (2:25-30) மூலமாக உதவி கொண்டுவரப்பட்டிருந்ததால் (2:25: 4:18), பவுல் எல்லா விஷயங்களைக் குறித்தும் அவர்களின் மனங்களை ஆறுதல்படுத்த விரும்பினார். மூன்றாவது, அவர் தீமோத்தேயுவை அவர்களிடத்தில் விரைவில் அனுப்புதல் மற்றும் பார்வையிடுவதற்கான தமது நீண்டகாலத் திட்டங்கள் ஆகியவை பற்றி அவர்கள் அறிய வேண்டுமென்று விரும்பினார் (2:19-23: 1:26: 2:24: பிலேமோன் 22ஐக் காணவும்). நான்காவது, அவர் அன்பு, ஊக்கப்படுத்துதல், மற்றும் பக்தி விருத்தியூட்டுதல் ஆகியவற்றின் செய்தியொன்றை அவர்களுக்கு அனுப்ப விரும்பினார்.

இந்த புத்தகத்தில் பல ஆய்வுக்கருத்துகள் ஊடாடுகின்றன. சந்தோஷம் என்பது இவற்றில் மிக முக்கியமானதாக உள்ளது (4:4-7). "சந்தோஷம்" மற்றும் "சந்தோஷமாயிருங்கள்" என்ற வார்த்தைகள் இந்தப் புத்தகத்தில் குறைந்தபட்சம் பதினாறு முறைகள் காணப்படுகின்றன. இது ஒரு ''நேர்மறையான மன எண்ணப்போக்கினால்'' உண்டான சந்தோஷமல்ல. மாறாக, இது கிறிஸ்துவுக்குள் இருக்கிற சந்தோஷமாகும். "கிறிஸ்துவுக்குள்" என்ற அல்லது அதற்கு இணையான சொற்றொடர்கள் இந்தப்புத்தகத்தில் பத்தொன்பது முறைகள் காணப்படுகிறது. நீங்கள் இந்தப்புத்தகத்தை வாசிக்கும்போது, ''சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து'' என்பதற்கான பல குறிப்புகளைக் கண்ணோக்குங்கள்.

### வரைகுறிப்பு

பிலிப்பியருக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதம் தனிப்பட்ட கடிதமாயிருப்பதால், இதற்கு வரைகுறிப்பிடச் செய்யப்படும் முயற்சி எதுவும் செயற்கையாக இருத்தல் என்பது அவசியமாயுள்ளது. ஒரு வரைகுறிப்பு கிறிஸ்துவை மையங்கொண்டுள்ளது: **அதிகாரம் 1:** கிறிஸ்து நமது நோக்கமாயிருக்கின்றார் (1:21). **அதிகாரம் 2:** கிறிஸ்து நமது முன்மாதிரியாயிருக்கின்றார் (2:5). **அதிகாரம் 3:** கிறிஸ்து நமது வெகுமதியாய் இருக்கின்றார் (3:13, 14). **அதிகாரம் 4:** கிறிஸ்து நமது அன்பளிப்பாய் இருக்கின்றார் (4:13, 19). இங்கு பொருளடக்கங்களின் பட்டியல் ஒன்றுள்ளது:

அ. பவுலின் வாழ்த்து (1:1, 2).

ஆ. பிலிப்பியருக்காக நன்றி செலுத்துதல் மற்றும் ஜெபம் (1:3–11).

இ. பவுலின் சிறையிருப்பு மற்றும் பொதுவாக உபத்திரவம் ஆகியவை பற்றிய உட்கண்ணோட்டம் (1:12–30).

ஈ. கிறிஸ்துவைப்போன்று தாழ்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் இருத்தலினால் ஒன்றித்திருக்க ஊக்கப்படுத்துதல் (2:1–18).

உ. தீமோத்தேயுவை அனுப்பிவைப்பதற்கான எதிர்காலத்திட்டமும் எப்பாப்பிராத்தீத்துவை அனுப்பி வைப்பதற்கான உடனடியான திட்டமும் (2:19–30).

ஊ. கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள்; பவுல் தாமே பின்பற்றத் தகுதியான ஒரு உதாரணத்தை உயர்த்திப்பிடித்திருந்தார் (3).

எ. ஒருமைப்பாடு, சந்தோஷம், சரியான எண்ணம் ஆகியவற்றிற்கான பல்வேறு போதனைகள் (4:1–9).

ஏ. அவர்களின் கொடைக்காகவும், போதுமென்றிருத்தலின் மீதான போதனையுடன் கூடிய நன்றியுணர்வு (4:10–19).

ஐ. முடிவுரை : தனிப்பட்ட வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் (4:20–23).

### பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்

பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் சந்தோஷம் என்பது வெறும் "நேர்மறையான சிந்தையினுடைய எண்ணப்போக்கின்" விளைவாக இராதிருப்பினும், இது கிறிஸ்தவர்களின் பண்பாக இருக்க வேண்டிய நேர்மறையான எண்ணப் போக்கிற்கு நேர்த்தியான சில கருத்துக்களைக் கொண்டுள்ளது (2:5; 3:13, 14; 4:4–8).

நம்மில் பெரும்பான்மையானவர்கள் பின்வரும் வார்த்தைகளை அடிக்கடி கேட்டிருக்கின்றோம்: "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" (4:13). இது ஒரு பொதுவான சத்தியமாகப் பயன்படுத்தப்பட முடியும், ஆனால் பவுல் இந்த வார்த்தைகளை எழுதியபோது தமது சிந்தையில் குறிப்பிட்ட சில விஷயங்களைக் கொண்டிருந்தார்: இயேசுவின் மூலம், அவர் தமது நிதிநிலை மற்றும் உடல்நிலை ஆகியவை எப்படியிருப்பினும் திருப்தியாயிருக்கக் கற்றிருந்தார் (4:11, 12). நாம் இயேசுவின் மூலம் திருப்தியாய் இருக்கக் கற்றுக்கொள்ள முடியும்.

"கிறிஸ்துவுக்குள்" என்ற சொற்றொடரின் மறைவான கருத்துப் பற்றிக் கல்வியாளர்கள் போராடி இருக்கின்றனர். சிலர் இதை "கிறிஸ்துவுக்குள் ஒன்றித்திருத்தல்" அல்லது "கிறிஸ்துவின் சரீரத்தில் இருத்தல்" என்று விரிவாக மொழி பெயர்த்திருக்கின்றனர். இதை உள்ளவாறே வாசித்தல் அனேகமாக மிக நல்லதாயிருக்கும். இயேசுவுடனான இந்த உறவு முறையானது "கிறிஸ்துவுக்குள்" என்று மாத்திரம் கூறும் வகையில் சொல் விளக்கப்படுத்துதல் மாத்திரமே மிக நெருக்கமானதாகவும் தனிப்பட்ட வகையினதாகவும் இருக்கும்.


இந்தக் கடிதம் உபதேசரீதியான ஆய்வுக்கட்டுரையாக இல்லாதிருப்பினும், இதில் அழகுமிகுந்த கிறிஸ்துவியல் வசனப்பகுதிகள் அடங்கியுள்ளது (2:5–11). இது தொடக்ககால கிறிஸ்தவ கீதமாய் இருந்ததென்று சிலர் நினைக்கின்றனர். இது ஒரு ஆழமிக்க வசனப்பகுதியாக உள்ளது; ஆனால் பவுல் இதை ஒரு எளிய நோக்கத்திற்காகவே பயன்படுத்துகின்றார். நம்மைப் பிறருக்கு சுயநலமின்றி ஒப்புக்கொடுத்தல் என்பதை நமக்குப் போதிப்பதற்காக இதை நாம் செய்தால், ஒருநாளில் தேவன் நமக்குப் பலன் அளிப்பார்!

# பொறுமையான நோவா

கடவுளுக்கு பிரியமான செல்லங்களே! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வாழ்த்துகிறேன்.

எல்லாரும் சந்தோஷமாக இருக்கிறீர்களா? இந்த சந்தோஷத்தோடே பொறுமையைக் குறித்து கற்றுக் கொள்ளலாமா?

ஏறக்குறைய 4500 ஆண்டுகளுக்கு முன்பாக நோவா என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தேவனுக்கு பயந்து மிகவும் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார் என்றும், அவர் ரொம்ப பொறுமையாய் தேவனுக்கு கீழ்படிந்தார் என்றும், பைபிள் நோவாவை குறித்து சொல்லுகிறது. அவருக்கு 500 வயதான போது, தேவன் நோவாவை அழைத்தார். உடனே நோவா 'சொல்லுங்கள்! நான் என்ன செய்யனும்' என்று கேட்டார். அதற்கு தேவன், 'நீ நான் சொன்னபடி ஒரு பெரிய பேழையை உண்டுபண்ணு' என்று சொன்னார். அதற்கு நோவா, 'நான் நீங்கள் சொன்னபடி செய்கிறேன்' என்றார்.



தேவன் பேழையை 300 முழம் நீளமும், 50 முழம் அகலமும், 30 முழம் உயரமும் இருக்க வேண்டும்; மற்றும், அது கொப்பேர் மரத்தால் செய்யனும் என்றார். மேலும் தேவன் அநேக கட்டளைகளை போட்டார். நோவா, தேவன் சொல்வதை பொறுமையாய் கவனித்து, அவர் சொன்னபடியே ஏறக்குறைய 100 வருஷமாக பேழையை செய்தார்.

பேழையை செய்து முடித்த பிறகு பேழைக்குள் நோவாவும் அவரின் குடும்பமும் உள்ளே சென்றார்கள். பிறகு தேவன் பேழையின் கதவை அடைத்தார். மிகப்பெரிய வெள்ளம் மற்றும் மழையினால் இந்த பாவ உலகத்தை தேவன் அழித்து தீரும் வரை, பேழைக்குள் ஒரு ஆண்டுக்கும் மேலாக, தேவன் பேழையின் கதவை திறக்கும் வரைக்கும், தன் குடும்பம் மற்றும் மிருக ஜீவன்களோடு பொறுமையோடு இருந்தார். தேவன் கதவை திறந்து, புதிய உலகத்திலே நோவாவையும் அவர் சந்ததியையும் வாழ வைத்தார். அந்த சந்ததிதான் 'நாம்'. என்ன ஒரு ஆசீர்வாதம்!

நோவா, தேவன் நன்மை செய்யும் வரைக்கும் பொறுமையோடு கீழ்படிந்து அவருக்கு காத்திருந்தார். உங்களை உங்கள் அம்மா அல்லது அப்பா ஒரு அரை நாள் ஒரு இருட்டறையில் அடைத்து வைத்தால் என்ன செய்வீர்கள்? பொறுமையாயிருக்க முடியுமா? வசனம் படிக்கும் போது, சபையில் வசனம் கேட்கும்போது ஒரு 10 நிமிடம் கூடுதல் நேரமானால் கூட எரிச்சல் வருகிறதா? கடவுள் உங்களை உயர்த்தும் வரைக்கும் காத்திருக்கனும். தேவன் சொன்னதை செய்யனும்; அவருக்கு கீழ்படியனும். இப்படி பொறுமையாயிருந்ததினால் தேவன் நோவாவை உயர்த்தினார். நீங்களும் பொறுமையாய் இருந்து கீழ்ப்படிந்தால், தேவன் உங்களையும் உயர்த்துவார். கர்த்தர் உங்களை உயர்த்தும் வரைக்கும் அவருக்கு கீழ்படிந்து பொறுமையாயிருங்கள். அவர் நிச்சயம் ஆசீர்வதிப்பார் மற்றும் உயர்த்துவார்.

**மனனவசனம் : 1 பேதுரு 5:6**

"ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

– உங்கள் அண்ணன்
அன்பு ஏசுதாஸ்.

## ஏவாள்

அன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் பெயரால் இந்த அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் முழுஆண்டு தேர்வில் (Annual Examination) வெற்றி பெற உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். நாம் இந்த மாதம் தேவன் படைத்த முதல் பெண்ணைப்பற்றி தெரிந்துக்கொள்வோமா?

அந்த பெண்ணின் பெயர் ஏவாள். அவள் கணவன் பெயர் ஆதாம். இவர்கள் இருவரும் தான் இந்த உலகத்தில் முதல் மனுஷன், மனுஷி ஆவார்கள். தேவன் இவர்கள் இருவரையும் ஏதேன் என்னும்

அழகிய தோட்டத்திலே குடியிருக்கச் செய்தார். மேலும் தேவன், அவர்களோடு வந்து உறவாடிக்கொண்டிருந்தார். தேவன், அவர்கள் இருவருக்கும், அந்த தோட்டத்தின் நடுவிலிருக்கிற மரத்தின் பழத்தை சாப்பிடக் கூடாது என்று கட்டளைக் கொடுத்திருந்தார்.

அவர்கள் இருவரும் அதின்படி நடந்தனர். ஒருநாள் பிசாசு பாம்பு உருவத்தில் வந்து, ஏவாளிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி, அந்த பழத்தை சாப்பிட தூண்டினான். ஏவாள் பிசாசின் வார்த்தைகளை நம்பி, தேவனுடைய கட்டளையை மீறி அந்த பழத்தை சாப்பிட்டு, பாவம் செய்தாள். மேலும் அதை தன் கணவனுக்கும் கொடுத்து, அவனையும் சாப்பிட வைத்தாள்.

பிறகு என்ன நடந்தது தெரியுமா? தேவன் வந்து, அவர்கள் செய்த பாவத்தினால் அவர்கள் இருவரையும் சபித்து, தோட்டத்தைவிட்டு துரத்தினார். அவர்கள் தேவனுடைய துணையையும், பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் இழந்தனர்.

குட்டீஸ்! நாம் எப்பொழுதும் கடவுளுடைய வார்த்தையை மீறி நடக்கிறது பாவம். கடவுளுடைய வார்த்தையை மீறி நடக்கும்படி, யார் என்ன சொன்னாலும் நாம் அதை செய்யக்கூடாது. செய்தால் நாமும் ஏவாளைப் போல தேவனாலே தண்டிக்கப்படுவோம். ஏனென்றால் நாம் செய்த செயல்கள், நாம் பேசுகின்ற பேச்சுக்கள் ஒவ்வொன்றையும் குறித்து தேவனுக்கு கணக்கு கொடுக்க (பதில் சொல்ல) வேண்டும். ஆகையால், தேவன் சொன்னதை மட்டும் செய்வோம். ஆசீர்வாதம் பெறுவோம்!

— அன்பு ஏசுதாஸ்

## பிரம்மாண்ட படைப்பு

ஹாய் குட்டீஸ் ! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தையும், இதில் உள்ளவைகளையும் படைத்தது யார் ? அவர் எப்படி படைத்தார் ? என்பதை இந்த முறை தெரிந்துகொள்வோம்.

பைபிளின் முதல் புத்தகமான ஆதியாகமம் புத்தகம் 1,2 அதிகாரங்கள் இதைப்பற்றி தெளிவாக நமக்கு சொல்கிறது. இந்த முழு உலகத்தையும், அதிலுள்ள அனைத்தையும் தேவன் (கடவுள்) படைத்தார். எல்லாவற்றையும் ஒரே நாளில், ஒரே நொடியில் படைக்க அவருக்கு வல்லமை இருந்தும், ஆறு நாட்களில் அவைகளை படைத்தார்.

முதல் நாளில் வெளிச்சமும்; இரண்டாம் நாளில் ஆகாய விரிவையும்; மூன்றாம் நாளில் புல், பூண்டு, மரம் செடி கொடிகளையும்; நான்காம் நாளில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களையும்; ஐந்தாம் நாளில் நீரில் வாழும் உயிரினங்கள், பறவைகளையும்; ஆறாம் நாளில் மிருகங்களை படைத்து, கடைசியாக தன்னுடைய சாயலில் மனிதர்களையும் படைத்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக படைத்தார். கடவுள் படைத்த மனிதன் பெயர் ஆதாம்; மனுஷி பெயர் ஏவாள்.

தேவன், தான் படைத்த படைப்புகள் எல்லாவற்றையும் மனிதர்கள் ஆண்டுகொள்ள அதிகாரம் கொடுத்தார். மேலும், தான் படைத்த படைப்புகள் அனைத்தையும் ஆசீர்வதித்தார். ஏழாம் நாளிலோ ஓய்ந்திருந்தார். அதினால் ஒரு வாரத்திற்கு ஏழு நாட்கள் வந்தது.

எல்லா படைப்புகளையும் மனிதர்களுக்காக படைத்து, அவர்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார். ஆனால் மனிதர்களையோ தேவபக்தியுடன் தனக்காக வாழும்படி படைத்தார். குட்டீஸ், நாம் தேவனுக்கென்று படைக்கப்பட்டவர்கள். தேவ சாயலாக படைக்கப்பட்டவர்கள். ஆகையால், கடவுளுக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நீங்க செய்வீங்கதானே ?

**மனப்பாட வசனம் : யாத்திராகமம் 20:11**

"கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

— குமினி பிரதீப்

### சிறுவர் பகுதி புதில் எழுதியவர்கள்

1. A. கெனித்சாம் பெஞ்சமின் – மதுரை
2. M. ஜோனாத்தான் – கரூர்
3. M. ராஜா – கரூர்

# காயின், ஆபேல்

ஹாய் செல்லக்குட்டீஸ்! உங்கள் எல்லாருக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை தெரிவிக்கிறேன். சென்ற மாத இதழில் சாமுவேல் என்பவரின் மகன்களுடைய சம்பவத்திலிருந்து கீழ்ப்படிதல் பற்றிய பாடம் கற்றுக்கொண்டு, அதை பயிற்சி செய்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நல்லது!

இந்த மாதம் காயீன் மற்றும் ஆபேலைப் பற்றிய வேதாகம சம்பவத்தை பார்க்கலாமா? தேவன் படைத்த முதல் மனுஷன் ஆதாம், முதல் மனுஷி ஏவாள் என்பது நம் எல்லாருக்கும் தெரிந்தே. இவர்களுடைய இரண்டு மகன்கள் காயீன் மற்றும் ஆபேல் இவர்கள் இருவரும் தேவனுக்கு கொடுத்த காணிக்கைப் பற்றி பார்க்க போகிறோம்.

காயின் நிலத்தை பயிரிடுகிறவனாக இருந்தான். ஆபேல் ஆடு, மாடுகளை மேய்ப்பவனாக இருந்தான். இருவரும் ஒரு நாள் தேவனுக்கு என்று காணிக்கைகளை கொடுத்தார்கள்.

காயின் தன்னுடைய நிலத்தில் விளைந்த கனிகளை தேவனுக்கென்று கொண்டு வந்தான். ஆபேல் தன்னுடைய மந்தையில் உள்ள ஆடுகளின் முதன்மையானவைகளை தெரிந்துகொண்டு, அவைகளிலும் கொழுமையானவைகளை தேவனுக்கென்று கொண்டு வந்தான். ஆபேலுடைய காணிக்கைகளை தேவன் ஏற்றுக்கொண்டார். ஆனால், காயினுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

தேவன் தன்னுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற எரிச்சல் கொண்டு, கோபத்தில் காயின் ஆபேலை என்ன செய்தான் தெரியுமா? ஆபேல் நிலத்தில் தனியாக இருக்கும் வேளையில், அவனைக் கொன்றுபோட்டான். என்ன ஒரு கொடுமை பார்த்தீர்களா செல்லங்களா?

ஏன் இப்படி காயின் நடந்து கொண்டான் என்று உங்களுக்கு சொல்கிறேன் கேளுங்கள். நாம் ஏதேனும் ஒரு நிகழ்ச்சிக்கோ, விழாவிற்கோ (உம் பிறந்த நாள், திருமண நாள்) செல்லும் போது, அவர்களுக்குக்கென்று நம்முடைய அன்பின் வெளிப்பாடாக பரிசு பொருளை வாங்கி கொடுப்பது வழக்கம். ஆனால், எப்படிப்பட்ட பரிசு பொருளை வாங்குவோம்? அவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கக்கூடிய, சிறப்பான பொருள்களை தானே வாங்கிகொடுப்போம்? நமக்கு யாரும் பரிசுகொடுத்தால், நாமும் இப்படிப்பட்ட பரிசு பொருளை கொடுத்தால் தானே வாங்குவோம்?

சாதாரண மனிதர்களாகிய நாமே இப்படி சிந்திக்கும்போது, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர், ஏன் காயினுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று இப்பொழுது புரிகிறதா? காயின் தனக்கு கிடைத்ததிலிருந்து ஏதோ கொடுப்போம் என்று கொடுத்தான். தேவனுக்கு கொடுக்க வேண்டியதை கொடாமல், தன் இஷ்டபடி செயல்பட்டான். ஆனால், ஆபேல் மிகவும் சிறப்பான, முதன்மையானவைகளை தேவனுக்கென்று கொடுத்தான்.

குட்டீஸ், உங்களுக்கு தேவன் கொடுத்தவைகளிலிருந்து தேவனுக்கென்று நீங்களும் காணிக்கையை கொடுத்தால், சிறப்பானதை கொடுங்கள். உற்சாகமாய், மனதார, மகிழ்ச்சியுடனே கொடுங்கள். அவர் மிகவும் சந்தோஷப்படுவார். அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்:** நீதிமொழி 3:9—10 "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு; அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்."

— ஏஞ்சலின் கமலம்

## சிறுவருக்கான கேள்விகள்

1. தேவன் மனிதர்களை எந்த நாளில் படைத்தார்?
2. தேவன் மனிதர்களை ஏன் படைத்தார்?
3. ஏவாள் பாவம் செய்ய காரணம் என்ன?
4. ஆபேல் தேவனுக்கு எப்படிப்பட்ட பலி கொடுத்தார்?
5. தேவன் நோவாவைப் போல உங்களையும் உயர்த்த நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

## மார்ச் மாதக் கேள்விகள்

1. நம்மை விழுங்கும்படி கெர்ஜிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிபவன் யார்?

2. உலகம் முழுவதும் யாருக்குள் கிடக்கிறது?

3. தேவனுடைய வேதத்தை மறந்தால், தேவன் என்ன செய்வார்?

4. பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததும் எது?

5. இரு மனமுள்ளவர்கள் இருதயங்களை என்ன செய்ய வேண்டும்?

6. மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் என்ன ஆவார்கள்?

7. அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். அவன் யார்?

8. ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தது யார்?

9. பவுல், தேவபக்தியுள்ள பெண்கள் தங்களை எப்படி அலங்கரிக்க வேண்டும் என்கிறார்?

10. கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீ என்ன செய்யபடுவாள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-04-2019**


அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431


### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. நீதிமொழி 22:6 | 6. நியாயா. 13:2 |
| 2. உபாகமம் 6:7 | 7. 2 தீமோ 1:5 |
| 3. நியாயா. 13:8 | 8. மத்தேயு 5:9 |
| 4.சங்கீதம் 119:11 | 9. 2 தீமோ 9:15 |
| 5.மன்னிப்பு கேட்கவும் , மன்னிக்கவும் | 10. 1 தீமோ 1:2 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
2. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
3. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
4. Mr. S. டேவிட் சாந்தகுமார் – செங்கோட்டை
5. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
6. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
7. S. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
8. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
9. Mrs. M. ஈஸ்வரி – கரூர்
10. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கடலூர்
11. Mrs. லீலா ஜோசப் – கோவை
12. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
13. S. தங்கம் – கன்னியாகுமரி
14. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
15. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
16. Mrs. ஹெலன் திலக் – மதுரை
17. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
18. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
19. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
20. J. விஜய் – ஒத்தக்கடை
21. Mrs. P. இந்திரா – திருமங்கலம்
22. P. சூரிய பிரியா – திருமங்கலம்
23. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
24. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – ஒத்தக்கடை
25. K. மோகன் – நாமக்கல்
26. Mrs. R. சரோஜா – தென்கலம்
27. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
28. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
29. Mrs. மேரி ராஜ் – மதுரை
30. A. ரோஸ் மேரி – சென்னை
31. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
32. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
33. Mrs. ஜான்ஸி – ஆனைமலை
34. Mrs. பாக்கியராஜம் – மதுரை
35. சூசை மரியன் – சென்னை
36. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
37. A. G. சாமுவேல் – தூத்துக்குடி
38. D. குளோரி திலகவதி – ஈரோடு
39. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !


Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th March 2019
Posted at Arasaradi HPO on 10th, 11th March 2019


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
92 4421 4421, 92 4431 4431


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers